# பனிமயம்

பிப்ரவரி 2021



ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-



## *பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...*

உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

பிப்ரவரி மாதம் நமது பேராலயப் பங்கில் ஏராளமான சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதலில் **02.02.2021** செவ்வாய் அன்று மாலையில் தூத்துக்குடி மறைவட்ட அளவில் "**புனித சூசையப்பர் ஆண்டு**" தொடக்கவிழா மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்கள் தலைமையில் நமது பேராலயத்தில் நிகழவிருக்கிறது. மறைவட்டத்தின் அனைத்துப் பங்குத் தந்தையரையும், துறவியரையும், இறைமக்களையும் பனிமயத் தாயின் பேராலயத்திற்குப் பெருமகிழ்வுடன் வரவேற்கிறோம்.

பிப்ரவரி என்றாலே லூர்தன்னை நினைவு வருமல்லவா! புனித லூர்துமாதா கெபியில் பத்து நாள்கள் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று **11.02.2021** வியாழன் அன்று அன்னையின் திருவிழா மகிழ்வுடன் கொண்டாடப்படும்.

நமது பேராலய மண்ணின் மைந்தரும், பேராலய முன்னாள் பங்குத் தந்தையுமான அருள்தந்தை அந்தோனி சூசைநாதர் அவர்களின் இறையடியார் ஆய்வுப் பணி நிறைவுவிழா **07.02.2021** ஞாயிறு மாலை திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் கொண்டாடப்படுகிறது. அது நமக்கு இன்னொரு பெருமித நாள்தானே!

**17.02.2021** சாம்பல் புதன் அன்று தவக்காலம் தொடங்குகிறது. கடந்த ஆண்டுபோலவே, தவக்காலத்தைப் பொருளுள்ள வகையில் கடைப்பிடிக்க நற்செய்திக் கூட்டங்கள், விவிலியப் பாசறைகள், சிறப்பு வழிபாடுகள், தியானம் ஆகியன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் ஆர்வமுடன் பங்கு பெறுவோமாக!

புதிய மேய்ப்புப் பணிக்குழுவின் பேரார்வத்தால் பேராலயமும், வளாகமும் புதுப் பொலிவு பெற்றுக்கொண்டிருப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். இத்திருப்பணிகளில் ஈடுபடும் அனைவரையும் ஆண்டவர் நிறைவாக ஆசீர்வதிப்பார். அனைத்தையும் புதிதாக்கும் கிறிஸ்துவை ஈன்ற பனிமயத் தாயின் ஆசி உங்களோடு இருப்பதாக!



என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்

உதயம் 21 தாரகை 6

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருட்பணி. குமார்ராஜா**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
41, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### பெண்களுக்கு எதிரான வன்முறை

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுவதற்கும், அவர்களின் துன்பங்களைக் கருத்தில் கொண்டு கவனிப்பதற்கும் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. பனிமய அன்னை ....4
தி. சொர்ணராஜன் விக்டோரியா

2. பேராலய வரலாறு ....6
செல்வராஜ் மிராந்தா

3. பனிமயம் - மீள்பார்வை ....8
கலாபன் வாஸ்

4. அன்னையின் புகழ்ப்பாடல்! ....10
அருள் மரி வேந்தன்

5. தாய் வழி மகனின் பாதம் ....12
அருள்பணி. ஸ்டார்லின்ச.ல.

6. மரியன்னை புனிதர்கள் :
புனித பவுஸ்தினா ....14
அருள்பணி. குமார்ராஜா

7. விவிலியப் போட்டி ....16

8. லூர்து அன்னை ....19
அருள்பணி. பென்சிகர் லூசன்

9. பனிமயப் பகிர்வு ....20

10. மாதம் ஒரு மாதா படம் ....26





பனிமய அன்னை 5

# இயேசு சபையினர் பணி

**பதுரவாதோ (Padroado)**

**பாப்பரசர் 5ஆம் நிக்கோலாஸ்** (Pope Nicholas V, 1447-1455) 1455 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் நாளன்று **'ரொமானுஸ் பொந்திபெக்ஸ்'** (Romanus Pontifex) என்ற பத்திரத்தின் மூலம் **'பதுரவாதோ'** ('Padroado' in Portuguese ; 'Jus Patronatus' in Latin) என்ற ஞான அதிகார சலுகையை முதன் முதலாக போர்த்துக்கீசிய மன்னன் **5ஆம் அல்போன்ஸ்** (Alphonse V) என்பவருக்கு அளித்தார்.

பதுரவாதோ சலுகையின்படி போர்த்துக்கீசியர் அவர்கள் ஆட்சி செய்யும் இடங்களில் கத்தோலிக்க திருமறையைப் பரப்பி, ஆலயங்கள் அமைத்து, அவைகளைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

புதிய நாடுகளில் கிறிஸ்தவ திருமறையைப் பரப்பப் பேராவல் கொண்டு முன்னணியில் நின்ற போர்த்துக்கல் (Portugal), இஸ்பானியா (Spain) ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே எழுந்த மோதலை தவிர்க்க, 1439 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் நாளன்று **பாப்பரசர் 6–ஆம் அலெக்சாண்டர்** (Pope Alexander VI, 1492-1503) 'Inter Caetera' என்ற அதிகாரப் பத்திரம் மூலம் உலகைப் பாகப்பிரிவினை செய்து, **'எல்லைக்கோடு'** (Papal Line of Demarcation) ஒன்று ஏற்படுத்தி, அந்தக்கோட்டுக்கு மேற்கே இஸ்பானியா அரசுக்கும், கோட்டுக்குக் கிழக்கே போர்த்துக்கீசிய அரசுக்கும், ஞானாதிக்கச் சலுகை உரிமையாகும் என்று தீர்மானித்தார்.

1514 ஆம் ஆண்டு ஜூன் 7 ஆம் நாளன்று பாப்பரசர் 10 ஆம் சிங்கராயர் (Pope Leo X, 1513-1521) 'Dum Fidei Constantiam' என்றப் பத்திரத்தின் மூலம் போர்த்துக்கீசிய மன்னனுக்கு இந்திய திருச்சபையின் மேல் வழங்கப்பட்ட ஞானாதிக்கச் சலுகையை உறுதிப்படுத்தினார்.

**தூத்துக்குடியில் திருமறை**

கி.பி. 1537 ஆம் ஆண்டின் இறுதிக்குள், பரவ குல மக்கள் அனைவரும் கிறிஸ்துவத் திருமறையைத் தழுவி திருநீராட்டுப் பெற்றிருந்தனர்.

கி.பி. 1538 ஆம் ஆண்டில் பரவ மக்களுக்காக தூத்துக்குடியில் முதல் ஆலயம் உருவானது. பரவ மக்களுக்குத் திருநீராட்டு வழங்கிய கொச்சியின் பங்குக்குரு **பேதுரு கொன்சால்வஸ் சுவாமிகள்**தான், (Pedro Goncalves) துயத்துக்குடியின் முதல் ஆலயத்தைக் கட்டினார்.

**புனித இராயப்பரு**க்கு அர்ப்பணிக்கப்பட்ட இவ்வாலயம், முத்துக்குளித்துறையில் உருவான **முதல் ஆலயம்**!

இந்த ஆலயம் தற்போது அமைந்துள்ள திருச்சிலுவை ஆலயத்திற்கு மேற்கில், சாந்து பேதுரு கோவில் தெருவில் (St.Peter Kovil Street)) இருந்துள்ளது.

இவ்வாலயத்தின் முன் நடப்பட்டிந்த மரச்சிலுவைதான், முத்துக்குளித்துறையில் நடப்பட்ட முதல் குருசடிச் சிலுவை யாகும். அந்தச் சிலுவைதான் இன்றிருக்கும் திருச்சிலுவை ஆலயத்திற்கு அடுத்தாற்போல் தனியாக வைக்கப்பட்டு ஆராதிக்கப்படுகிறது.

முத்துக்குளித்துறை, கோவா மறைமாவட்ட ஆயர் **ஜாண் ஆல்புகார்க்** (Joao Afonso De Aluquerque, 1534-1548) அவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்ததால், தூத்துக்குடியின் புனித இராயப்பரின் ஆலயமும் கோவா மறைமாவட்ட ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கோவா ஆயரின் வேண்டுகோளின்படி, புனித இராயப்பர் ஆலயத்தைக் கட்டியயழுப்பிய **பேதுரு கொன்சால்வஸ் அடிகளாரே** அவ்வாலயத்தின் முதல் பங்குக் குருவாகப் பொறுப்பேற்றார். இவர் உருவத்தில் குள்ளமாக இருந்ததால், தூத்துக்குடி கிறிஸ்தவ மக்கள் அவரை **'கட்டைச்சாமி'** என்று அழைத்து வந்தனர்.



**இயேசு சபையின் வருகை**

பரவ மக்கள் கிறஸ்தவத் திருமறையைத் தழுவி இருந்தாலுங்கூட, முத்துக்குளித் துறையில் போதிய குருக்கள், வழிபாடு, மறைபோதகம் ஏதுமில்லாத காரணத்தால், அவர்கள் மீண்டும் தங்களது பழைய இந்து மதப் பழக்க வழக்கங்களையேத் தொடர்ந்து கைப்பிடித்து வந்தனர்.

பரவ மக்களுக்கு திருமறைப் பணியாற்ற போதிய குருக்கள் இல்லாத நிலையை அறிந்த போர்த்துக்கீசிய மன்னர் **3ஆம் ஜான்** (King John III) மனம் வருந்தினார். அக்காலத்தில் இந்தியா முழுவதும் திருமறையைப் பரப்பி, அதனைக் கண்காணிக்கும் **பதுரவாதோ** என்ற ஞான அதிகாரச் சலுகையை போர்த்துக்கீசிய மன்னர் பாப்பரசரிடம் இருந்து பெற்றிருந்தார். தனது ஞான அதிகாரக் கடமையை உணர்ந்த 3 ஆம் ஜான் மன்னர் அன்றைய **பாப்பரசர் 3ஆம் சின்னப்பரிடம்** (King John III) 1534-1549) பரவர்களின் நிலைமையைப் பற்றிக் கூறினார்.

1539 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 ஆம் நாளன்று **பாப்பரசர் 3ஆம் சின்னப்பர்** தனது 'Regimini Militantis Ecclestae' என்ற பாப்பிறை மடல் மூலம் அச்சமயத்தில் தோற்றுவிக்கப் பட்டு இருந்த இயேசு சபையை அங்கீகரித்திருந்தார்.



புதிதாக தோற்றுவிக்கப் பட்ட இயேசு சபையின் நிறுவரான **புனித இஞ்ஞாசியார்.** (St. Ignatius of Loyola) பாப்பரசர் 3 ஆம் சின்னப்பரின் வேண்டுகோளுக்கு இணங்கி, இந்தியாவின் முத்துக்குளித் துறையில் திருமறைப் பணியாற்ற இயேசு சபைக் குருக்களை அனுப்பி வைக்க சம்மதித்தார்.

இந்தியாவில் திருமறைப் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட இயேசு சபைக் குருக்கள் மூவர், கீழ்வருமாறு :

1. போர்த்துக்கீசியரான **ரோட்ரிக்ஸ்** (S. Rodrigues),
2. இஸ்பானியரான **போபாடில்லா** (Bobadila) மற்றும்
3. இத்தாலியரான **பால் தே கமேரினோ** (Paul de Camerino).

பின்னர் **போபாடில்லா**விற்கு பதிலாக **பிரான்சிஸ் சவேரியார்** (Francis Xavier) சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

இவர்கள் மூவரும் இந்திய பயணத்திற்காக **லிஸ்பன்** (Lisbon) நகரை அடைந்தபோது, ரோட்ரிக்ஸ் என்பவருக்கு பதிலாக **பிரான்சிஸ்கோ டி மான்சிலாஸ்** (Francisco de Mansilhas) சேர்த்துக் கொள்ளப்பட்டு, இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர்.

**புனித சவேரியார் இந்திய வருகை**



முத்துக்குளித்துறையில் திருமறைப் பணியாற்ற அனுப்பி வைக்கப்பட்ட முதல் இயேசு சபைக் குரு **புனித சவேரியார்** !

இந்தியாவில் இயேசு சபையின் முதல் வேத போதகதளம், **முத்துக்குளித்துறையே** !

1542 ஆம் ஆண்டு மே 6 ஆம் நாளன்று, சவேரியார் கோவா வந்து சேர்ந்தார். அங்கு அப்போது சுமார் 100 குருக்கள் இருந்தனர். 1541 ஆம் ஆண்டு ஜூலை25 ஆம் நாளன்று **காம்ப்ரோமிசோ** (Compromiso) என்ற பத்திரத்தின் மூலம் **திரு விசுவாச அமைப்பு** (Confraternity of the Holy Faith) கோவாவில் தோற்றுவிக்கப்பட்டது. அதன் மூலம் **புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரி** (College of St. Paul- 'Colegio da Santa Fe', meaning, College of the Holy Faith) ஆரம்பிக்கப்பட்டது.

1542 ஆம் ஆண்டில் இந்தக் குருத்துவக் கல்லூரியில் மூன்று பரவ குல மாணவர்கள் பயின்று கொண்டிருந்தனர். **மனுவேல்** (Manuel), **கஸ்பார்** (Gaspar), **பிரான்சிஸ் கொய்லோ** (Francis Coelho) ஆகிய மூவரில் மனுவேலும், கஸ்பாரும், திருத்தொண்டர்கள் (Deacons) மற்றும் மூன்றாமவர், இளநிலை மாணவராகும். இவர்கள் மூவரும் முத்துக்குளித் துறையின் தூத்துக்குடியைச் சேர்ந்தவர்கள்.

- (தொடரும்)



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**

தூய பனிமய அன்னை திருத்தல பேராலய வரலாற்றுக் குறிப்புகள் : 11



# பேராலய வரலாறு

அருள்தந்தை ஜோசப் பர்னாந்து அடிகளார் காலத்தில் ஆலயத்தின் முகப்பு பரோக்பாணி மாற்றியமைக்கப்பட்டு தற்போதைய வடிவத்தில் காணப்படுகிறது.

1974 முதல் 1979 வரை பங்குத் தந்தையாகப் பணியாற்றிய ஜோப் டிரோஸ் அடிகளார் காலதல் 1977இல் தேர்த் திருவிழா கொண்டாடப்பட்டது. அதன் நினைவாகவே சின்ன மலைக் (கூண்டு) கோபுரம் தேர் வடிவத்தில் கட்டப்பட்டது. தஸ்நேவிஸ் மாதா பள்ளிக்கூடமும் அவர் காலத்தில்தான் தொடங்கப்பட்டது.

1981ஆம் ஆண்டு பங்குத் தந்தையாக பொறுப்பேற்ற அருள்தந்தை லாம்பர்ட் மிராண்டா காலத்தில் ஆலயத்தின் வரலாற்று முக்கியத்துவத்தையும் பிறமத மக்களிடம் காணப்பட்ட பனிமய அன்னை பக்தியும் திருவிழாக் காலங்களில் அவர்களுக்குக் கிடைத்த அற்புதங்களின் நன்றியறிதல்களின் அடையாளமாக திரள்திரளாக கூடிக் கும்பிடுவதையும் பார்த்து அவரின் பெரும் முயற்சியால் ஆலயம் (Basilica) பேராலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது. அவர் காலத்தில் தான் தஸ்நேவிஸ் மாதா பள்ளிக்கூடம் இன்றிருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது. (அதற்கு முன் அந்த வளாகத்தில் பழைய கித்தேரியம்மாள் (Santa Quitteria) ஆலயமும், அருள்திரு அந்தோனியார் சுவாமி காலத்தில் கட்டப்பட்ட அந்தோனியார் ஆலயமும் இருந்தன.)

அருள்திரு ராபின்ஸ்டன் அடிகளார் காலத்தில் பங்கு மக்கள் பயன்பெறும் வகையில் பனிமயம் என்ற மாத இதழ் தொடங்கப்பட்டது. அவர் காலத்தில்தான் முன் மண்டபம் பழுது பார்க்கப்பட்டது.

அருள்தந்தை இருதயராஜ் அடிகளார் காலத்தில் சிறிதாயிருந்த சிலுவைக் கோயில் இப்போது காணப்படும் அளவிலும் தோற்றத்திலும் கட்டப்பட்டது.

அருள்தந்தை இரத்தினராஜ் காலத்தில் முன் மண்டபத்திற்கு முன்பு திறந்த வெளியாயிருந்த பகுதி முழுவதும் சேர்த்து ஆலய முன் மண்டபப் பகுதியின் நீளம் கூட்டப்பட்டு வாசல்கள் அமைக்கப்பட்டன.

அருட்பணி ஜெரோசின் அ.கற்றார் அடிகளார் காலத்தில் மொசைக் தளமாக இருந்த ஆலயத்தின் தரை முழுவதும் பளிங்குக் கற்களால் பாவப்பட்டன. கோயில் அருகே ஒரு நற்கருணைச் சிற்றாலயமும், சிலுவைக் கோயிலை அடுத்து இரண்டு தளங்கள் கொண்ட ஒரு மண்டபமும், கொடி மரத்திற்கு வடக்கே பயணிகள் விடுதியும், ஜியார்ஜ் ரோட்டில் எஸ்கலின் பயணிகள் விடுதியும் கட்டப்பட்டன.

அருள்முனைவர் லெரின் டிரோஸ் பங்குத் தந்தையாய் பணியாற்றிய காலத்தில் ஆலயம் ஒரு புதுப் பொலிவு பெற்றது. ஆலயத்தின் உட்சுவர்கள் முழுவதும் மேல்பூச்சு அகற்றப்பட்டு சுவரின் பாதி உயரத்திற்கு கண்களுக்கு இதமான டைல்ஸ் பதிக்கப் பட்டன. ஆலயத்தின் வெளிப்புறப் படிக்கட்டுகள் சீர்செய்யப்பட்டன. முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் சிரமமின்றி ஆலயத்திற்குள் போய்வர தகுந்த இடங்களில் சாய்வுத் தளங்கள் அமைக்கப்பட்டன. ஆலயப் பக்கவாட்டுத் திண்ணைகளில்



வழுக்காத தரைக்கற்கள் பதிக்கப்பட்டன. ஆலய ஒளிஒலி அமைப்புகள் நவீனப்படுத்தப்பட்டு ஆலயம் ஒரு ஹைடெக் தோற்றத்தைக் கொடுக்கச் செய்தார். அதோடு மட்டுமல்லாமல், குருக்கள் பழைய இல்லம் முழுவதும் இடிக்கப்பட்டு புதிதாக தற்காலத் தேவைகளுக்கேற்ப கட்டியெழுப்பப்பட்டது. புனித சவேரியார் ஆலயமும் திருப்பணி செய்யப்பட்டது. பழைய கல்லூரியின் இடிபாடுகளின்மேல் அருள்திரு அந்தோனி பர்னாந்து அடிகளார் கட்டிய அந்தோனியார் மண்டபம் (பிலோமினம்மாள் மண்டபம்) அழகுறப் புதிப்பிக்கப்பட்டது.

**பிளவுகளும் அதன் விளைவுகளும்**

முத்துக்குளித்துறை கத்தோலிக்க சமுதாயத்தில் அவ்வப்போது எழும் சிறுசிறு உட்பூசல்கள் ஊதிப் பெரிதாக்கப்பட்டு இனப் பிளவுகள் ஏற்படும்போது எழும் முட்டல்களும் மோதல்களும் விளைவிக்கும் ஆழமான காயங்களும் வடுக்களும் அழிக்க முடியாத உறுத்தல்களாக நிலைத்து விட்டவைகள் பல. சிலரின் தன்மகத்துவ மனப்போக்கும் இயக்கமும் எவ்வாறு ஆலயத்தின் நியாயமான உரிமைகளையும் உடைமைகளையும் பறித்தெழுந்தன என்பதையும் ஆலய வரலாற்றுக் குறிப்பில் பதிவு செய்வது அவசியம் எனக் கருதப் படுகிறது. அது ஒரு பாடமாக அமையும் என்ற நம்பிக்கைதான் காரணம்.

நாம் திருமறை தழுவியபோது நம்மை மீட்பின் பாதையில் வழிநடத்தி வந்த பதுர்வாத இயேசு சபை கி.பி. 1773-ஆம் ஆண்டு எதோ சில காரணங்களால் கலைக்கப்பட்டு, பிறகு ஏறத்தாழ அறுபது ஆண்டுகள் சென்றபின் பிரான்ஸ் நாட்டில் தூலூஸ் நகரில் புரபொகாந்தா இயேசு சபை தொடங்கப் பட்டது. பிரெஞ்சு புரபொகாந்தா இயேசு சபை குருக்கள் 1838ஆம் ஆண்டு முத்துக் குளித்துறை ஊர்களில் நம்மை வழிநடத்த வந்தபோது நிகழ்ந்த ஒரு வரலாற்றுப் பிழையின் தொடர்கதையாக, அதுவரை ஒன்றுபட்டிருந்த சமுதாயத்தில் பிளவுகள் ஏற்படத் தொடங்கியது. அப்பிளவுகளின் விளைவாக தூய பனிமய ஆலயமும், போர்த்துக்கீசியர் காலத்திலிருந்தே அனுபவ பாத்தியத்திலிருந்த நிலத்தில் டச்சுக்காரர்கள் ஆதிக்கம் வந்தபோது அவர்களின் அனுமதியோடு 1712ஆம் ஆண்டு ஆலயம் கட்டி எழுப்பப்பட்டதிலிருந்தும் அனுபவத்திலிருந்த ஆலய வளாகம் பறிபோனது ஏன் எப்படி என்பதை அறிய சிறிது வரலாற்றைத் திரும்பப் பார்ப்பது அவசியம்.



**செல்வராஜ் மிராந்தா**

# 'பனிமயம்' – மீள் பார்வை 17

## 1999 - 2000

ஒவ்வொரு நாளும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இயேசு நம்மைச் சந்திக்கின்றார். அதனை அறியமுடியா வண்ணம் நமது மனத்தை அறியாமை இருள் கவ்வியிருக்கின்றது. உலக இச்சைகளின்பால் நாம் கொண்டுள்ள கவனத்தை, இயேசுவின் பால் செலுத்தினால், நாமும் இயேசுவைச் சந்திக்கலாம். – **வெ. ஜான் ஃபெல்டன் வாஸ்.**

★ **"மாதாவின் பிள்ளை** அவலமாகச் சாகாது" – என்ற வாக்கியம், எனது சிறுவயது முதல் என் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்ட அமுத மொழி. நமது அன்புக்கும், மரியதைக்கும் உரிய, காலஞ்சென்ற **பிரான்சிஸ் திபூர்சியுஸ் ரோச்** ஆண்டகையவர்கள், அடிக்கடி இவ்வாக்கியத்தை அவரது பிரசங்கங்களில் கூறியதாக எனக்கு ஞாபகம்... மாதாவிற்கு உகந்த பிள்ளைகளாக இருப்பவர்கள், அவர்களின் மரண வேளையில், பரிசுத்த நிலையில் இருப்பார்கள் என்பதே இதன் பொருள். – **றொசாரியோ மோத்தா, கோவை.**

★ இந்த இறைவார்த்தைகள், இறைவனின் அன்னைக்கு எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கின்றன என்று வாருங்கள்

"யார் இவள்! வைகறைபோல் தோற்றம், திங்களைப்போல் அழகு, ஞாயிறுபோல் ஒளி, போர் அணிபோல் வியப்பார்வம், யார் இவள்!"

முதற்கனிகளின்மலரும் ரோசா போன்றும், நீரூற்றின் ஓரத்தில் அலரும் லீலி மலர் போன்றும், கோடை காலத்தில் தோன்றும் லெபனோனின் பசுந்தளிர் போன்றும் திகழ்ந்தா(ள்)ர்" – இ.பா. 6:10; சீ.ஞா 50:8 – **ஜே.பி. பெர்னாண்டோ.**

★ ஆமைகளில் பலவகை உண்டு. **'கல்லாமை'** தீயது! மனித வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாய் இருப்பது.

இந்தக் காலத்திலும் கல்வியறிவு பெற முடியாமல் **'அறியாமை'**யின் பிடியில் சிக்கித் தவிப்போர் அநேகர். இதற்குக் காரணம் 'முயலாமை'!

கற்றுக் கொடுக்கும் முதல் ஆசானே தாய் தந்தையர்தான். ஆனால், இன்றையப் பெற்றோரில் பலர் இந்தப் பொறுப்பை உணராமல் தட்டிக் கழித்து வருகின்றனர்.

'இப்போதும் நான் ஒரு மாணவன்தான் – கற்பதற்கு இன்னும் எவ்வளவோ உள்ளது' – என்ற சிந்தனை உள்ளவர்களால்தான் முன்னேற்றம் பெற முடியும். 'எனக்கு எல்லாம் தெரியும்' – என்ற எண்ணம் இறுமாப்பு.

திருச்சபையில் **'ஆசிரியம்'** (MAGISTERIUM) என்கிறோம். ஒவ்வொரு நாளும் நமக்குத் தாய்த் திருச்சபை, அன்னையாக – ஆசிரியையாக இருந்து கற்றுத் தருகிறது. கற்பதும் – கற்றுக் கொடுப்பதும் ஒரு தொடர் நிகழ்ச்சி. இந்தப் பணியைச் செய்து வரும் அத்தனை ஆசிரியப் பெருமக்களும், வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள். அறிவுக் கண்களைத் திறக்கும் மருத்துவர்கள். – **கலாபன் வாஸ்.**

அனிச்சம் பூ அங்கத்தை – கசை
அடியால அழிக்கிறாரே!
உதிரம் வடித்த என் உயிரை
உதிரம் வடிய புழியிராரே!
தோள் சுமந்த என் தேவனை
தோல் கிழிய அடிக்கிறாரே!
பிஞ்சு தொங்குதே சதையெல்லாம்
பிஞ்ச பிச்சிப் பூவாக!
வார்த்தையால சொல்ல முடியா
வதைபடும் என் மகனே!
வலிக்கிறதா உங்களுக்கு!

**– லியோனா சில்வேரா**



★ மரியாள், இறைவன் மனு உருவெடுக்க தன் ஒப்புதலை அளித்த காரணத்தால், அவள் **தூய ஆவியின் பத்தினி** ஆனாள். அவள் இயேசு கிறிஸ்துவின் **கன்னித் தாயுமானாள்.** கல்வாரி மலையில் கிறிஸ்து அவளை நமக்குத் தாயாக அர்ப்பணித்தபோது, அவள் **எல்லா விசுவாசிகளுக்கும் தாயானாள்.** ஆகையினால், திருச்சபை எனும் கன்னி, கிறிஸ்துவுக்கு மட்டுமே சொந்தமான தன்னை முழுவதுமாகக் கையளித்து ஒரு 'மாதிரி'யாகவும் (2கொரி 11:2; எபே 5:27) கிறிஸ்துவுக்குத் துணைவியாகவும் விளங்கி (எபே 5:23-25) அவருடன் இணைந்து மீட்புப் பணிக்கு உடனிருந்து துணைபுரிந்தாள். கிறிஸ்துவின் மறைபொருளை உடலின் உறுப்பினர்களாகிய நமக்கு நம் அன்னை மரியாள்போல், திருச்சபையும் ஞானத்தாயாய் இருந்து வருகிறாள். - கிறிஸ்டியான் டிவோட்டா D.Pharm.

★ பள்ளியில் பயிலும் மாணவன், தேர்வு முடித்த பின்னரே பட்டம் பெறுகிறாள். உழைப்பாளி, தன் பணி முடித்த பின்னரே ஊதியம் பெறுகிறான். பந்தய ஓட்டத்தில் ஓட்டத்தை முடித்த பின்னரே பரிசளிக்கப் படுகிறது. அதுபோலவே, மனிதகுலம் தங்கள் வாழ்வு முடிந்த பின்னரே, இறைவனால் நல்லவர் எனத் தீர்மானிக்கப் படுகின்றனர். இன்னோர் இறையருள் பெற்று, தம் பக்தர்களுக்கு உதவிடும் புதுமைகளைக் கொண்டே உலகத்தார் அவர்களை **'நல்லவர்'** என்றும், **'புனிதர்கள்'** என்றும் போற்றி வணங்குகின்றனர். - **இடிந்தகரை, T.A. சந்தக் குருஸ்.**

★ **அருள்திரு M. ஜோசப் பர்னாந்து** (1950-1954) அடிகள், பரிசுத்த பனிமய அன்னை திருத்தல ஆலயத்தில் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய காலத்தில், அன்னையின் ஆலய முன் பகுதியை அழகு படுத்தினார்கள். அன்னை ஆலய முன் உள்ள மேல் முகப்பு பழுதடைந்து இருந்தது. அதை உடைத்துவிட்டு, புதிதாக அழகாகக் கட்டினார்.

திருவிழாக் காலங்களில், சிறிய மண்டபத்தின் முன் பகுதியில் துணிப் பந்தல் போடுவார்கள். மழை வந்தால், இறைமக்கள் அல்லல்படுவார்கள்.

இதை உணர்ந்து, பெரும் முயற்சி செய்து, முன் மண்டபத்திலிருந்து குருஸ்பாதம் வரையில் மண்டபம் அமைத்தார் **பேரருட்திரு. J. இரத்தினராஜ் அடிகளார்.** இவர், அருள்திரு. ஜோசப் பர்னாந்து அடிகளாரின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது. - **D.T. வாஸ்.**

★ **சீகன் பால்கு**வின் கடின உழைப்பு, விடா முயற்சி, விவிலியத்தின்மீது அவருக்கிருந்த அளவற்ற பற்று, அவரை தமிழுக்கு முதன் முதலாக விவிலியத்தை ஆக்கம் செய்ய வைத்தது. அவர் நட்டுவித்த அவ்விதைதான் இந்நாள்வரை வளர்ந்து வருகிறது. சீகன் பால்கு 1711-ல், புதிய ஏற்பாட்டை மொழிபெயர்ப்பு செய்து, நிறைவு செய்தார். - **அருள்திரு. ச.இ. அருள்சாமி.**

★ **அந்தக் கேள்வி** - "இந்த மலைகள், ஆறுகள், விண்மீன்கள், இந்தப் பூமி இவையெல்லாம் எங்கிருந்து வந்தன?" - சந்நியாசி கேட்டார்.

"உனது கேள்வி எங்கேயிருந்து வந்தது?" - என்று கேட்டார் குரு.

உனக்குள்ளேயே தேடு!

**அனுபவசாலிகள்** - இது ஒரு சுபி கதை. இறந்தவன் ஒருவன், சவப் பெட்டியைத் தட்டியதும், சவப் பெட்டியின் மூடியைத் திறந்தார்கள். அவன் எழுந்து உட்கார்ந்தான். "எல்லாரும் என்னை என்ன செய்கிறீர்கள்" - என்று சுற்றி நின்றவர்களிடம் கேட்டான். "நான் சாகவில்லை" என்றான்.

அவனது வார்த்தைகளை யாரும் நம்பத் தயாராயில்லை. வந்திருந்தவர்களில் ஒருவர் சொன்னார், "நண்பா, டாக்டர்கள் இரண்டு பேரும், சாமியாரும் நீ செத்துவிட்டதாக உறுதியாகச் சொல்லிட்டாங்க... ஆக, நீ செத்த பிணம்தான்!" - என்று அவனைப் புதைத்தே விட்டார்கள்! - **'THE SONG OF THE BIRD' - தமிழில் - தேன்மலர்.**

**கலாபன் வாஸ்**
94863 90793



மரியன்னையின் மேன்மைகள் : 12

# அன்னையின் புகழ்ப்பாடல்!



விவிலியத்தில் எத்தனையோ புகழ்ப் பாடல்கள் உள்ளன. அவை அனைத்திலும் உயர்ந்ததாக, சிறந்ததாக உள்ளது அன்னை மரியாவின் புகழ்ப்பாடல் என்று சொல்வது மிகையே அல்ல. "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது" (லூக் 1:47-55) என்னும் மரியாவின் பாடல் புதிய ஏற்பாட்டின் மிகப் பிரபலமான பாடல் என்றே கூறலாம்.

ஆங்கிலத்தில் "Magnificat" என்று அழைக்கப்படும் இந்தப் பாடலின் தலைப்பிலேயே ஒரு கம்பீரம் தொனிப்பதைப் பார்க்கிறோம். அருமையான இந்த புகழ்ப் பாடல் நம் செபத்துக்கும், வாழ்வுக்கும் ஒரு பாடமாக, மாதிரியாக அமைகின்றது என்பதுவும் இதன் இன்னொரு தனிச்சிறப்பு. இப்பாடலின் அனைத்துச் சிறப்புகளையும் எடுத்துச் சொல்ல ஒரு தனி நூலே தேவைப்படும். இருப்பினும், சுருக்கமாக இக்கட்டுரையில் அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

**1. பாடுவது ஒரு சிறந்த செபம்:** "உளமார இசை பாடி ஆண்டவரைப் போற்றுங்கள்" (எபே 5:19) என்று அறிவுரை சொன்னார் பவுலடியார். ஒரு முறை பாடுவது இருமுறை செபிப்பதற்கு சமம் என்று நாம் அனைவரும் அறிவோம். ஆண்டவர் இயேசுவும் பாடி செபித்தார் என்பதை "அவர்கள் புகழ்ப் பாடல் பாடிவிட்டு ஒலிவமலைக்குச் சென்றார்கள்" (மாற் 14:26) என்னும் வரிகளிலிருந்து அறிகிறோம். அதுபோலவே, அன்னையும் பாடி இறைவனைப் போற்றினார் என்னும் செய்தியினை இப்புகழ்ப் பாடல் வழி அறிகிறோம். இயேசுவைப் போல, அன்னை மரியாவைப் போல நாமும் பாட வேண்டும் என்பது நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம்.

**2. செபம் மகிழ்வின் அனுபவம்:** செபிக்கும்போது அது ஒரு மகிழ்வின் அனுபவமாக இருக்கவேண்டும். அதுபோல, நாம் மகிழ்வோடு இருக்கும்போதெல்லாம், இறைவனைப் போற்ற வேண்டும் என்பது நாம் இப்பாடலிலிருந்து கற்றுக்கொள்ளும் இரண்டாம் பாடம். "உங்களுள் யாரேனும் ... மகிழ்ச்சியாயிருந்தால் திருப்பாடல்களை இசைக்கட்டும்" (யாக் 5:13) என்றார் புனித யாக்கோபு. அதற்கேற்ப "என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது" (1:47) என்று பாடினார் அன்னை. ஆண்டவர் இயேசுவும் தூய ஆவியால் பேருவகை அடைந்து, "தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன்" (லூக் 10:21) என்று செபித்ததை நமக்கு இது நினைவூட்டுகிறது.

**3. இறைச் செயல்களை அறிக்கையிடுதல்:** "அவர்தம் வல்ல செயல்களுக்காய் அவரைப் போற்றுங்கள்" (150:2) என்று அழைப்பு விடுக்கிறது திருப்பாடல் 150. "ஆண்டவரே, உம் வியத்தகு செயல்களால் என்னை மகிழ்வித்தீர்" (திபா 92:4) என்று திருப்பாடல் ஆசிரியர் நன்றி கூறுகிறார். "ஆண்டவர் உம்மீது இரக்கம் கொண்டு உமக்குச் செய்ததையெல்லாம் உம் உறவினருக்கு அறிவியும்" (மாற் 5:19) என்று இயேசு தீய ஆவி பிடித்திருந்து மனிதரைக் குணமாக்கிய பின் சொன்னதையும் இங்கு நினைவுகூர வேண்டும். இறைவன் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் வியத்தகு செயல்கள் பல செய்துள்ளார். அவற்றை நினைவுகூர்ந்து நாள்தோறும் கடவுளைப் போற்றுவதற்கு நம்மைத் தூண்டுகிறார் அன்னை மரியா.

**4. இறைவனின் திருப்பெயர்:** "தூயவர் என்பதே அவரது பெயர்" (1:49) என்று போற்றினார் அன்னை மரியா. இறைவனின் திருப்பெயர் போற்றுதற்குரியது, ஆற்றல் நிறைந்தது. பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த மனிதன் "இயேசுகிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்" (திப 3:6) என்று பேதுரு சொன்னபோது, அம்மனிதன் குதித்தெழுந்து நடக்கத் தொடங்கினார். "இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்" (பிலி 2:10) என்கிறார் பவுலடியார். எனவே, இறைவனின் திருப்பெயரை அடிக்கடி உச்சரித்து, தலைவணங்கி செபிக்க வேண்டு;ம்.

**5. இறையச்சம் செபவாழ்வின் அடிப்படை:** "இறையச்சமே ஞானத்தின் தொடக்கம்" என்பது நாம் அனைவரும் நன்கறிந்த ஓர் இறைவாக்கு. அவருக்கு அஞ்சி நாம் வாழ வேண்டும், செபிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார் அன்னை மரியா. இறைவன் "அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் இரக்கம் காட்டி வருகிறார்" (1:50) என்று அறிக்கையிட்டதன் வழியாய் இறையச்சத்தின் மேன்மையை எடுத்துரைக்கிறார். இங்கே "இறையச்சம்" என்பது தண்டனைக்குரிய பயம் அல்ல, மாறாக இறைவன்மீது நாம் கொள்ளும் மரியாதைக்குரிய அச்சம் என்பதை மனதில் கொள்ளவேண்டும். "அன்பில் அச்சத்திற்கு இடமில்லை. மாறாக, நிறை அன்பு அச்சத்தை அகற்றிவிடும். ஏனெனில் அச்சத்தில் தண்டனை உணர்வு அடங்கியுள்ளது" (1 யோவா 4:18) என்னும் புனித யோவானின் வாக்கு இதனை உறுதிப்படுத்துகிறது. இறைவனுக்கு அஞ்சி, மரியாதையுடன் நடப்பவர் அனைவருக்கும் அவர் இரக்கம் காட்டுகிறார் என்பதற்கு அன்னை மரியாவின் வாழ்வே மிகச் சிறந்த சான்று.

**6. செபம் இறைத் திட்டத்தை வெளிப்படுத்துகிறது:** "வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார். செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்" (1:53) என்னும் வரிகளில் அன்னை மரியா இறைவனின் வலிமைமிகு செயல்களை அறிக்கையிடுகிறார். இறைவன் சமூக, பொருளாதார மாற்றங்களில் ஈடுபடுபவர், தலையிடுபவர் என்று அன்றே முழக்கமிட்டார் அன்னை மரியா. அடித்தட்டு மக்களின் வாழ்வு நிலையை எண்ணிப் பார்க்கும் தன்னலமற்ற செபத்துக்கு அன்னை மரியா சான்றாகத் திகழ்கிறார்.

**7. இறைவன் வாக்கு மாறாதவர்:** "காலையில் உமது பேரன்பையும், இரவில் உமது வாக்குப் பிறழாமையையும் எடுத்துரைப்பது நன்று" (திபா 92:2) என்று கூறுகிறது திருப்பாடல். "மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும், அவர்தம் வழிமரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்" (1:54) என்று அறிக்கையிட்டதன் மூலம் அவரது வாக்குப் பிறழாமையை எடுத்துரைக்கின்றார் அன்னை மரியா.

நாம் செபிக்கும்போதெல்லாம் அன்னையின் புகழ்ப் பாடலை மனதில் கொண்டு அன்னையைப் போலவே செபிப்போமாக!

**அருள் மரி வேந்தன்**

# தாய் வழி மகனின் பாதம்

வழிகாட்டுவது என்பது ஒரு கலை. வழியை அறிந்த ஒருவரால் மட்டுமே பிறருக்கு வழிகாட்ட முடியும். அவ்வாறு வழி அறிந்து வழிகாட்டுபவர்தான் அன்னை மரியா. விவிலியத்தில் கலாத்தியர் 3:16வது இறைவார்த்தை இவ்வாறு கூறுகின்றது "கிறிஸ்து இயேசுவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையால் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள்" என்று.


இதையே படைப்பிலே கடவுளின் சாயலிலும் உருவிலும் படைக்கப்பட்டு அவரின் பிள்ளைகளாக இருந்தோம் என்பதை தொநூ 1:26 எடுத்துக்கூறினாலும், நமது கீழ்படியாமையாலும், இறைவனின் துணையின்றி அவரைப்போல் மாற வேண்டும் என்ற பேராசைக் கொண்டதாலும், சாத்தானின் மதி மயக்கும் வார்த்தைகளைக் கேட்டதாலும் மானுடம் தன்நிலையிலிருந்து விழுந்து விட்டதை எடுத்துரைக்கின்றது தொடக்கநூல். இவ்வாறு தந்தை இறைவனை விட்டு விலகிச் சென்றிடினும் அவர் நம்மை விட்டு விலகவில்லை. மீண்டும் நம்மை அவரின் பிள்ளைகளாய் வாழ வழி ஒன்றை காட்டுகிறார் அந்த வழிதான் அன்னை மரியா.

இதை தொ.நூ 3:15 தெளிவாக கூறுகின்றது "உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவோம்" என்று தீமையின் குரலை முறியடித்து நன்மையின் வழி நம்மை இட்டுச் செல்வாள். ஏவாளின் வழிவந்த அன்னை என்பதை அப்போதே இறைவன் முன்னறிவித்தார். இவ்வாறு தான் முன்னறிவித்ததை கடவுள் நிறைவேற்றினார் என்பதை கலா 4:4 "காலம் நிறைவேறிய போது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்".

கடவுள் அன்று முதல் பெற்றோருக்கு அளித்த வாக்குறுதியாகிய இயேசுவையும் இயேசுவை அடையும் வழியாகிய அன்னையையும் வழங்குகிறார். இவ்வாறு கடவுளின் அன்புப் பிள்ளைகளாக நம்மை மாற்ற சிலுவை மரணத்தையும் ஏற்றுக் கொண்ட இயேசு அவர் விண்ணகம் சென்ற பின்பும் கூட அவரைத் தேடி கண்டடைய வழியாக அன்னை மரியாவை சிலுவையில் அன்பு பரிசாக விட்டுச் சென்றார் என்பதை யோவா 19:27வது இறைவார்த்தை எடுத்துக் கூறுகின்றது. கடவுளின் பிள்ளைகளாக அவரின் திட்டத்தை செயல்படுத்த மறுக்கின்ற மறக்கின்ற நேரங்களில் அன்னை மரியா நமக்கு பாதைகாட்டி இறைவனிடம் அழைத்துச் செல்வாள் என்பதும் மறுக்க முடியா உண்மையாகும்.

விவிலியத்தில் புனித பவுல், பர்னபா ஆகியோருக்கு இறைவன் புறவினத்தாரின் ஒளியாகத் திகழும் திட்டம் வைத்திருந்தார் என்பதை எரே 1:5 தாயின் வயிற்றில் உருவாகும் முன்பே உன்னை அறிந்திருந்தேன் எனக் கூறி எரேமியா இஸ்ரயேல் மக்களுக்கு இறைவாக்கினன் ஆகும் திட்டம் வைத்திருந்தார். இறைவன். இவ்வாறு, சிம்சோன் பிலிஸ்தியர் கையில் இருந்து மக்களை விடுவிக்க வேண்டும் என்பதும் அவருக்கான இறைவன் திட்டமாக இருந்தது.

இந்த விவிலிய மாந்தர்களைப்போல் இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு திட்டம் வைத்துள்ளார். இதையே எரே 29:11 உங்களுக்காக வைத்திருக்கும் திட்டங்கள் நல்வாழ்வுக்கான திட்டங்கள் அன்றோ என.



ஆனால் துன்பங்கள், துயர்கள், இடையூறுகள் வரும் வேளைகளில் இறைவாக்கினர் எரேமியா 12:1 “ஆண்டவரே! நீர் நீதியுள்ளவர்: ஆயினும் உம்மோடு வழக்காடுவேன்” என்று கூறுவது போல், நாமும் பல வேளைகளில் இறைவனின் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் தடுமாறுகிறோம்.

இறைவார்த்தைக்கு கீழ்ப்படிய மறுத்து வேறுவழி சென்ற யோனாவை போல் பல வேளைகளில் வேறுவழி செல்ல முயல்கின்றோம். அவ்வேளைகளில் இயேசு என்னும் பாதையைக் காட்டியவளாய் வருகின்றாள் நம் அன்னை. இதைத்தான் யோவா 2:5 உள்ள பகுதியில் நாம் காண்கிறோம். “அவர் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்” என்று அவர் சொல்வதையெல்லாம் குறிப்பாக பிறரை அன்பு செய்தல், மாண்புடன் நடத்துதல், அவர்களுக்காக நம் வாழ்வினை அர்ப்பணித்தல் என இயேசுவின் வார்த்தைகளை வாழ்வாக்க இறைவனின் அன்பு பிள்ளைகளாக அவருடன் நெருங்கிய வாழ்வு வாழ வழிகாட்டுகின்றாள் நம் அன்னை.

எரேமியா கூறுவதுபோல் உனக்கான என் திட்டங்கள் வாழ்வு தருபவை என்பதை எடுத்துக்கூறி, இறைகுரலுக்கு செவிசாய்த்து வாழும் அன்பு பிள்ளைகளாக வாழ வழிகாட்டுகின்றாள் நம் அன்னை.

இத்தகைய அன்பு அன்னையின் பிள்ளைகளாகிய நாம் அன்னையை நம் வாழ்வின் மாதிரியாய் ஏற்போம். அவள் குரலுக்கு செவிசாய்ப்போம். அவளின் வழி இயேசுவை அடைந்து இறைவனின் பிள்ளைகள் என்ற தகுதியை மகிழ்வுடன் அனுபவிப்போம்.



**ஸ்டார்லின் ச.ல.**

# புனித பவுஸ்தினா

(1905 - 1938)

## அன்னையின் உதவி பெற்ற இரக்கத்தின் புனிதை!




புனித பவுஸ்தினா (Maria Faustyna Kowalska) நாம் அனைவரும் அறிந்த நம் காலத்தையப் புனிதை. “இரக்கத்தின் ஆண்டவர்” பக்தி முயற்சியை உலகம் முழுவதும் பரப்பியதில் பெரும் பங்கு வகித்தவர். இயேசுவைக் காட்சிகளில் காணும் பேறுபெற்ற இந்தப் போலந்து நாட்டுப் புனிதை “இறை இரக்கத்தின் திருத்தூதர்” என்றும் அழைக்கப்படுகிறார். “என் ஆன்மாவில் இறைஇரக்கம்” என்னும் இவரது நாள்குறிப்பேடு மிகவும் பிரபலமானது. அவரது காட்சியில் கண்டவாறுதான் இறை இரக்கத்தின் ஆண்டவர் படம் ஓவியமாகத் தீட்டப்பட்டு இன்று உலகின் எல்லா நாடுகளிலும் வணங்கப்படுகிறது.

போலந்தின் க்ளோக்கோவிச் கிராமத்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவர் ஹெலினா. ஸ்தனிஸ்லாஸ் கோவாஸ்கி, மரியன்னா தம்பதியரின் 10 குழந்தைகளில் மூன்றாமவர். சிறு வயதிலிருந்தே மரியன்னை பக்தியில் வளர்க்கப்பட்டார். அவரது தந்தை அதிகாலையிலேயே எழுந்து மாதா பாடல்களை உரக்கப் பாடுவாராம். குழந்தைகளை அவர் எழுப்பிவிடக்கூடாது என்று தாய் அவரைக் கடிந்துகொண்டாலும், மரியன்னையின் புகழை உரத்த குரலில் பாடுவார். அந்தப் பாடல்களைக் கேட்டு விழித்தெழுவர் பிள்ளைகள். மே மாதத்தில் மாதா பிரார்த்தனையை மன்றாடுவதும், அக்டோபர் மாதத்தில் செபமாலை செபிப்பதும் குடும்பமாக அவர்களிடமிருந்த பழக்கங்கள்.

தமது ஏழாவது வயதில் நற்கருணை ஆண்டவரின் முன் செபிக்கும்போது தமது அழைத்தலை உணர்ந்தார் ஹெலினா. வறுமையின் காரணமாக ஓரிரண்டு ஆண்டுகளே கல்வி கற்ற அவருக்கு எழுத, வாசிக்கத் தெரிந்திருந்தது. தமது 20ஆவது வயதில் வார்சா நகரை அடைந்து கன்னியர் இல்லத்தில் சேர்ந்தார். 1928ஆம் ஆண்டு பவுஸ்தினா என்ற பெயரில் தமது முதல் வார்த்தைப்பாட்டை வழங்கிய ஹெலினா அதன்பின்னர் 10 ஆண்டுகளே துறவியாக வாழ்ந்தார். எலும்புருக்கி நோயின் காரணமாகத் தமது 33ஆவது வயதிலேயே இறைபதம் சேர்ந்த இந்த சகோதரி 2000ஆம் ஆண்டில் புனிதையாக அறிவிக்கப்பட்டார்.

இந்தக் குறுகிய காலத்தில் பவுஸ்தினா பல காட்சிகள் கண்டார், பலமுறை பரவச நிலை அடைந்தார், இயேசுவுடன் உரையாடல்கள் பல நிகழ்த்தினார். அவரது வெளிப்படுத்துதல் காரணமாகத்தான் இறை இரக்கத்தின் பக்தி தொடங்கப்பட்டு இன்று உலகம் முழுவதும் பரவியுள்ளது. ஆண்டுதோறும் உயிர்ப்பு



ஞாயிறுக்கு அடுத்த ஞாயிறு "இறை இரக்கத்தின் ஞாயிறு" என்று கொண்டாடப்படுகிறது. தினமும் பிற்பகல் 03.00 மணிக்கு இறை இரக்கத்தின் செபமாலை செபிக்கப்படுகிறது.

இவ்வாறு இரக்கத்தின் ஆண்டவராம் இயேசுவோடு இணைத்தே அறியப்பட்ட அருள்சகோதரி பவுஸ்தினா மரியன்னைமீதும் பெரும் பக்தி கொண்டிருந்தார் என்பதும், மரியன்னையும் அவருக்குப் பலமுறை காட்சியில் தோன்றி உதவினார் என்பதும் பலரும் அறியாத உண்மைகள்.

தமது நாள்குறிப்பில் அன்னை மரியா தமக்குப் பலமுறை காட்சியில் தோன்றி தமது மனக் குழப்பங்களை நீக்கி தம்மை உறுதிப்படுத்தினார் என்று எழுதியுள்ளார் பவுஸ்தினா. இயேசு அவரிடம் வெளிப்படுத்திய செய்திகளை உறுதிப்படுத்தும் விதமாக இக்காட்சிகள் அமைந்திருந்தன.

முதன் முதலில் 19 வயது இளம்பெண்ணாக வார்சா நகருக்கு வந்திறங்கியபோது எங்கே போவது என்று தெரியாத நிலையில் மரியன்னையிடம்தான் அவர் மன்றாடினார். அப்போது இறைவனின் தாய் அருகிலுள்ள கிராமத்துக்குச் செல்லுமாறு தம் இதயத்தில் உணர்த்தியதாகவும், அங்கே சென்றபோது மரியன்னை உணர்த்தியவாறே எல்லாம் அமைந்திருந்தது என்றும் பகிர்ந்துள்ளார் பவுஸ்தினா.

இன்னொரு முறை உடல் நோயினால் பெரிதும் வருந்தியபோது, குழந்தை இயேசுவைக் கையில் ஏந்தியபடி அவருக்குக் காட்சியில் தோன்றினார் மரியன்னை. "நீ எவ்வளவு துன்புறுகிறாய் என்பது எனக்குத் தெரியும். அஞ்சாதே. நான் உன்னுடைய துன்பத்தில் பங்கு பெறுகிறேன்" என்று புன்னகைத்தார் நம் தாய். அதுமுதல் அவரது வேதனைகள் குறைந்ததாக எழுதியுள்ளார் பவுஸ்தினா.

மரியன்னையின் விண்ணேற்பு விழாவன்று திருப்பலியில் பங்கேற்க இயலாமல் அறையிலேயே படுத்துக்கிடந்த பவுஸ்தினாவுக்கு மரியன்னை தோன்றி, "உன் துன்பங்களையெல்லாம் உனது நாட்டுக்காகவும், உலகத்திற்காகவும் ஒப்புக்கொடு" என்று ஊக்கப்படுத்தினார்.

1933ஆம் ஆண்டு மே முதல் தேதியன்று பவுஸ்தினா தமது துறவற இறுதி அர்ப்பணத்தை வழங்கினார். அன்று மரியன்னையிடம் அவர் இவ்வாறு வேண்டிக்கொண்டார்: "இறைவனின் தாயே, மிகவும் புனித மரியே, என் தாயே, உமது மகன் இயேசு இன்று என் மணவாளரானதால் நான் இன்று முதல் உமது சிறப்பான மகளாகிவிட்டேன். எனவே, உம் திருமகனை முன்னிட்டு என்னை சிறப்பாக அன்பு செய்தருளும். ஓ என் அன்புள்ள தாயே, உம் திருமகனை எப்போதும் மகிழ்ச்சிப் படுத்துபவளாக வாழ எனக்கு அருளும்". எவ்வளவு அருமையான மன்றாட்டு! நாம் எல்லாருமே இம்மன்றாட்டை நாள்தோறும் செபிக்கலாமே!

ஓரிரவில் பவுஸ்தினா தமது காவல்தூதரைக் காட்சியில் கண்டார். அவர் பவுஸ்தினாவை பெருந்தீயில் ஏராளமான ஆன்மாக்கள் துன்புற்றுக்கொண்டிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார். அந்த ஆன்மாக்களெல்லாம் செபித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அந்த செபங்கள் அவர்களுக்குப் பலன் தரவில்லை. "நமது செபங்கள்தாம் அவர்களுக்கு உதவ முடியும். அவர்களது மிகப் பெரிய துன்பம் எது என்று ஆன்மாக்களிடம் கேட்டேன். கடவுளுக்காக ஏங்குவதே அது என்று ஆன்மாக்கள் பதிலுரைத்தார்கள்". பின் பவுஸ்தினா அன்னை மரியா இந்த ஆன்மாக்களைச் சந்திக்க வந்ததைக் கண்டார். ஆன்மாக்கள் அன்னையை "பெருங்கடலின் விண்மீன்" என்று அழைத்தார்கள். அன்னையின் வருகை ஆன்மாக்களுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது என்று எழுதியுள்ளார் பவுஸ்தினா.

இரக்கத்தின் திருத்தூதரான புனித பவுஸ்தினாவிடமிருந்த மரியன்னை பக்தியையும் நாம் பின்பற்றலாம்.



அருள்பணி. குமார்ராஜா





# விவிலியப் போட்டி 73

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## திருத்தூதர் பணிகள் நூல்

**கோடிட்ட இடத்தை நிரப்புக. விடைகளில் அதிகாரம், வசனம் எழுதவும்.**

1. யூதர்கள் அனைவரும் ________ குழம்பச் செய்தார்.
2. பேதுரு அவர்களிடம், 'நீங்கள் மனம் ________ .
3. ________ அவன் கடவுளைப் பெருமைப்படுத்தவில்லை;
4. ________ யைக் குறித்துப் பறைசாற்றி வந்தார்.
5. நேரம் ________ யபோது மக்கள் எகிப்து நாட்டில் மிகுதியாகப் பல்கிப் பெருகியிருந்தனர்.
6. எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியடைந்து ________ .
7. அதற்கு 'இரத்தநிலம்' ________ பொருள்.
8. 'ஆண்டவராகிய ________ மேல் நம்பிக்கை கொள்ளும்;
9. மாசிதோனியருக்கு ________ அறிவிக்க வேண்டும் என்று கடவுள் தீர்மானித்துள்ளார்

**விடைகள் அனைத்தையும் கோர்த்தால், உங்களுக்கான தவக்காலச் செய்தி கிடைக்கும். (உதவி: மத் 4:17)**

**விடைகளை வாட்ஸ்அப்பிலும் அனுப்பலாம் : 90920 55199 (அருள்பணி. ஸ்டார்லின்)**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.02.2021**

**பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் அன்பியப் பெயரையும் எழுதுங்கள்.**

# விவிலியப் போட்டி 72

## ஜனவரி 2021 — விடைக்குறிப்புகள்

### கலாத்தியர் திருமடல்

| | |
|---|---|
| 1. தாய் | கலா 5:11; |
| 2. போல | கலா 5:14 |
| 3. வாழுங்கள். | கலா 5:16 |
| 4. இந்த | கலா 2:13 |
| 5. புதிய | கலா 6:15 |
| 6. ஆண்டு | கலா 4:10 |
| 7. உங்களுக்கு | கலா 6:11 |
| 8. அனைத்தும் | கலா 3:4 |
| 9. நலமாயிருக்கும். | கலா 4:20 |

*இம்மாதச் செய்தி:*

**"தாய் போல வாழுங்கள். இந்த புதிய ஆண்டு உங்களுக்கு அனைத்தும் நலமாயிருக்கும்."**

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 246**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 129**

**விடை எழுதிய அன்பியங்கள் (27)**

**பரிசு பெறுபவர்கள் : 7**

1. **மெர்லின்,** சவேரியார். அன்பியம்
2. **X. ஜெஸிலா சேவியர்,** செபஸ்தியார் அன்பியம்
3. **C. சினேகா,** சிந்தாத்திரை மாதா அன்பியம்
4. **A.S. செலஸ்டின்,** சிறுமலர் அன்பியம்
5. **V. ரீஜோ,** சூசையப்பர் அன்;பியம்
6. **கில்டன் சரோலின்,** திருச்சிலுவை அன்பியம்
7. **S. ஸ்ஹவர்ட்ஸ் சான்ஜோ,** வியாகுல மாதா அன்பியம்



## பாராட்டுக்குரியவர்கள் : 122

1. **அந்தோனியார் அன்பியம் (5)**
R. ஜெயா J. பிருந்தா
சரோஜா K. டியான்ட்ரா
K. சான்டினோ

2. **அன்னை தெரசா அன்பியம் (3)**
J. பிரிசில்லா சதீஷ் லிசி அண்டோ
பிரிசில்லா பிரைட்டன் சதீஷ்

3. **அன்னை வேளாங்கண்ணி அன்பியம் (5)**
பெலிங்டன் திவ்யா
P. மெடோனா ஜோசப் D. டென்ஸி
A. கெவின் மேத்தா S. ஜெனிஸா

4. **கிறிஸ்து அரசர் அன்பியம் (8)**
டொ. மேரி ஜெர்லின் A.S. செலஸ்கி
S. ரொசாரியோ பிளம்மிங்
ரொசாரியோ பிளம்மிங் லூரட் வசந்த்
மரிய ஜீலியட் சாவியோ Z.
கிளமெண்ட்
J. கலைவாணி ஆல்ட்ரின்

5. **தஸ்நேவிஸ் மாதா அன்பியம் (4)**
இருதயம்மாள் பெனாட் கார்லஸ்
K. ஸ்டெனிமா A. பிருந்தாதிவான்

6. **திவ்யபாலன் அன்பியம் (4)**
சகாய ராணி ரொமிலா ரோச்
சுமி ஜாண்சன் பிரின்ஸி தாமஸ்

7. **பாத்திமா மாதா அன்பியம் (4)**
T. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
S. ஜோஸப்பின் செல்வி
மார்த்தாள் தீத்தோணிஸ்
K. ஜெஸிந்தா கான்ஸ்டன்

8. **இரக்கத்தின் மாதா அன்பியம் (3)**
சித்ரா மோத்தா மரிய சகாய டீனா
A. பிரைட்டன் ஜெரோபின்

9. **ஜெபமாலை மாதா அன்பியம் (6)**
செ. ஆக்னல் D. ஜோஸ்லின்
B. பிளஸிலா இருதயராஜ் G. டிரைபேனா
ஸ்மைலா டிஃபானி
சகாயம்மாள் பெனடிக்ட்

10. **காவல் தூதர் அன்பியம் (6)**
S. ஆரோக்கிய டெய்சி தா. வெனிட்டாள்
A. ஜெயா அகஸ்டின் சத்யா ராக்கேஷ்
A. ஹசீனா A. ஜோனத்தன்

11. **குழந்தை இயேசு அன்பியம் (4)**
M. எமல்டா J. பிரிஜிட்
S. லியாண்டின் சஹானா
ரதி பிரதீப்

12. **லூர்து மாதா அன்பியம் (6)**
X. ஜெனோ சேவியர் ஆலிவர் ஜெனோரா
சோனி சாஜி M. சகாயராணி
T. தாமஸ் ரோஸ்லின் தா. மேரி ஆனி

13. **மணல் மாதா அன்பியம் (3)**
ஹெபிட்டா B. கெயிட்டன்
ரொசாரி கோமஸ்

14. **மிக்கேல் அதிதூதர் அன்பியம் (4)**
மோ. இன்பெண்ட் ஜோஸ்னா வினா
ஆ. ஸ்டஸ்னோ இன்பெண்ட் எப்சிபா

15. **பனிமய மாதா அன்பியம் (4)**
சே. அந்தோனி சாமி ஆலன் கிறிஸ்டோ
சகாய ஆலின் கெயிட்டன் பர்னாந்து

16. **பரிபூரண மாதா அன்பியம் (4)**
ஜெனிஷா மெடோனா
வின்செண்ட் ரோசிட்டா J. ஷர்மிளா

17. **பவுலடியார் அன்பியம் (2)**
A. லீமா ஜாய் B. ரோஸ்லின் ராஜா

18. **பொம்பெய் மாதா அன்பியம் (9)**
M. வெர்ஜின் பிரைனோ
மேத்யூ கர்டோசா சிந்தியா மோத்தா
F. டெரிக் கோமஸ் மேரியோ ஜார்விஸ்
கேத்ரின் லூடா கான்ஸ்டன்
ஹெரிங்டன் ஷெர்பா கேத்ரின் கொரைரா

19. **இராயப்பர் அன்பியம் (5)**
S. டெய்சி அண்டோ மோத்தா
சுமதி ஜெயபால் M. சிந்தியா ஆனந்த்
ரெனோ போஸ்கோ நேவிசம்மாள்

20. **சவேரியார் அன்பியம் (6)**
டெலிலா அமலன் ஜோர்னல் ஜென்ஸி
பீட்டர் சூசையம்மாள் டெலிலா
அண்டன் சகாயம் ஆக்னல்

21. **செபஸ்தியார் அன்பியம் (6)**
D. அந்தோனியம்மாள் டென்சிங்
மா.போ. ஆன்சலம் ஜோ ஆனல்
சு. ரெஜில் ரெனிஷா ஆல்ட்ரிச்
அனிஷ் ரஞ்சி ஜீடியா K. சான்டினோ

22. **சிந்தாத்திரை மாதா அன்பியம் (2)**
P. நேசம் D.J.P.R. ராயன்

23. **சிறுமலர் அன்பியம் (3)**
எல்சிட்டா ஆனந்தன் விஜி சகாயராஜ்
A. ஜோசப் வில்லவராயர்

24. **சூசையப்பர் அன்பியம் (4)**
ரூபி கொர்னலியுஸ் J. மென்ஸி
சகாயராணி சில்வெஸ்டர் W. தெரசா நோயல்

25. **திருச்சிலுவை அன்பியம் (3)**
M. ரமணிதாஸ் ஜெஸிக்கா அபெக்ஸ்
C. ரமணி டிவோட்டா

26. **ஜீடு அன்பியம் (1)**
J. அக்ஷல்

27. **பாத்திமா மாதா அன்பியம் (1)**
M. டாரல் தீத்தோணிஸ்

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 117

### பரிசு பெறுபவர்கள் : 5

1. **மரிய துசியான்,** சென்னை
2. **லா.ஸ்டெல்லா,** திருச்சி
3. **ம. மேரி ஜான்ஸிராணி,** சேவியர்புரம்
4. **ஹெலன் அன்னமணி,** புதியம்புத்தூர்
5. **டெல்பின் கார்மல்,** தூத்துக்குடி

### பாராட்டுக்குரியவர்கள் : 112

**தூத்துக்குடி** : மென்சிலா லொயோலா, A. ப்ரங்கா அகிலன், பிலோ சாண்ட்ரியா, P. ஜீலியட் வாஸ், விஜியா பர்னாந்து, சாந்தினி, C.T. ஆசீர்வாதம், S. குழந்தை தெரசா, சகாயட்டா மச்சாது, A.S. செலஸ்டின், P. ரிமோல்டா, P. ரமோலா கமிலஸ், கோவில்ராஜ், S. வெர்ஜின் சகாயராஜ் ஆஸ்மின், J. பெனிட், ஜான்ஸி மென்டிஸ், J. ஆஸ்மின், ரேனு முறாயிஸ், C. செரினா, ரோஸ் சேவியர், வால்டர், A. ஜோஸ்பினா, P. பவித்ரா, செபஸ்டின் லடிஸ், P. ஸ்டெல்லா, ரோஸ் சேவியர், வேன்ஸி பிரின்;ஸ், ஜெஸிந்தா, ஜீடி கஜேந்திரன், T. மேத்யூ சுசேதா, மேத்யூ விவேக், டெல்பின் கார்மல், சகாயராஜ் ரொட்ரீக்ஸ், ரமேஷ் நர்மதா, F. ரேனு முறாயிஸ், பிலஸிலா இருதயராஜ், ஓஃபிலி யா தாமஸ் கொறைரா, பிளாசி செல்வராஜ், பி. ஜீலி யட் வாஸ், சாந்தினி, பேபி வால்டர், குணசீலி அப்பாதுரை, J. மெடோனா ஜீடு, சோபியா விஜய், வெர்ஜின் சாகாயராஜ், செ. ஜெபிசியா செ.செல்சியா, அபிஷா, ஜாக்சன், ஜெனோபியா, ரமேஷ் நர்மதா, ஜெஸிந்தா பர்னாந்து, ம. ஜான்ஸி மென்டிஸ், ஜெர்லின் ஜெப்ரி, பெ. ஜெரோனிஷா, J. கோல்வின் சேசுராஜ், A. ஜோஸ்பினா பர்னாந்து, J. சுகிர்தா, டெல்பின் கார்மல், S. ஜோறஸப்பின் செல்வி, K. லூசியா கபாலி, சாந்தி, மரிய லிமானா, லியோன், டொ. மேரி ஜெர்லின் ஜெப்ரி, J. கோல்வின் சேசுராஜ், ஜெஸிந்தா பர்னாந்து, R. சகாயராஜ் ரொட்ரீகஸ், S. சிந்தியா மோத்தா.

**மும்பை** : மேரி எமிலின்

**திருவனந்தபுரம்** : ஜோஸ்பின்

**கோழிக்கூடு** : மரிய ரீஜா

**சென்னை** : மரிய துசியான், கமலஜோதி ஜெயசீலன், சகாயராணி இம்மானுவேல், உமா கில்பர்ட், குணசீலன் பிரேமா

**திருப்பூர்** : பிரான்சிஸ் ஆர்லன்

**மதுரை** : ஜோசப் ராஜா மாணிக்கம், ராஜா, ஜீடு பர்னாந்து M.P.

**திருச்சி** : ஆஞ்சலா, லா. ஸ்டெல்லா, S. ஆல்பர்ட் கிறிஸ்டி, A. மேத்யூ விவேக், A. மோனிட்டா கிறிஸ்டி A. ஜான்சி ராணி

**பெரியகுளம்** : யு. குழந்தை தெரஸ்

**முத்தழகுபட்டி** : ஜெர்மேன், ரோசாலி, A. மரிய மதலேன்

**கயத்தாறு** : ஜெசிந்தா ராணி அமல்ராஜ் ரத்தினம்

**உடன்குடி** : M.A. சிலுவை அருள்

**கடலூர்** : ஹென்றிதாஸ்

**திருக்கழுக்குன்றம்** : Sr. லெத்திஸியா

**வேம்பார்** : ச. மகிழினி

**சேவியர்புரம்** : ம. மேரி ஜான்ஸிராணி

**ஆலந்தலை** : ஜெயட்டன் சுதா, பொன்சேகா, T. சுபாஸ் பர்னாந்து

**சிந்தாமணி** : என்சில்டா

**சேதுக்கு வாய்த்தான்** : ஜனதா பாப்பா, ஞானம் பாலசிங்

**புதியம்புத்தூர்** : ஹெலன் அன்னமணி

**குரும்பூர்** : சுபா ய்;டரன்ஸ்

**களக்காடு** : மேரி ஜான்ஸி ராணி

**சி. சவேயரியார்புரம்** : ஐஸ்வர்யா

### கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 215



### இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 246



மாதந்தோறும் மரியாள் : 8

# லூர்து அன்னை

1858 பிப்ரவரி 11ஆம் நாள் தொடங்கி 1858 ஜூலை 16 வரை அன்னை மரியா பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் மசபியேல் என்ற குகையில் பெர்னதத் என்ற சிறுமிக்கு தொடர்ச்சியாகக் காட்சியளித்தார். பிப்ரவரி 25ஆம் நாள் காட்சியில் மரியன்னையின் கட்டளைப்படி பெர்னதெத் ஒரு இடத்தில் தோண்ட அங்கு நீரூற்று பீறிட்டெழுகின்றது. அதுவே பின்நாளில் ஓடையாக மாறி இன்றும் திருப்பயணிகளின் நோய் நீக்கும் அரும் நலமளிக்கும் இடமாகத் திகழ்கிறது. இன்றும் எண்ணற்ற நோயாளிகள் லூர்து நகருக்கு வந்து பெரும் நோய்கள் நீங்கி நலம் பெற்று செல்கின்றனர்.



லூர்து அன்னை திருவிழா கொண்டாடப்படும் பிப்ரவரி 11ஆம் நாளைத்தான் திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் உலக நோயாளர்கள் நாளாகத் தேர்ந்தெடுத்து 1992ஆம் ஆண்டிலிருந்து நாம் கொண்டாட வழிவகுத்திருக்கின்றார்.

திருத்தந்தைக்கு பார்கின்சன் நோய் இருந்ததென்று 1991ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. இந்த நோயோடுதான் 14 ஆண்டுகள் அவர் போராடி வாழ்ந்து திரு அவையில் தனது பணிகளைச் செய்தார். இந்த நோயில் அவர் அடியெடுத்து வைத்ததும் உலகில் பல்வேறு நோய்களால் துன்புறும் மக்களோடு தன்னையே இணைத்துக் கொண்டார். இந்த உலகில் நோயினால் அவதியுறும் ஒவ்வொருவருடனும் நாம் இணைக்கப்பட்டுள்ளோம் என்ற உணர்வானது நாம் நோயுற்றிருக்கும் வேளையில் நமக்குள் எழ வேண்டும்.

திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதுபோல நோயுற்றோர்மீது இயேசு கொண்டுள்ள மனநிலையை நாமும் பின்பற்றுவோம். இயேசு ஒவ்வொருவர்மீதும் அக்கறை காட்டி, அவர்களின் துன்பங்களைப் பகிர்ந்து, அவர்களின் இதயங்களை நம்பிக்கை வாழ்வுக்குத் திறந்தார்.

இன்று நம் குடும்பங்களில் நோயுற்றோர், வயது முதிர்ந்தோர், ஆதரவற்றவரோடு நேரம் செலவழிக்கத் தயங்குகிறோம். ஆனால் நோயுற்ற நம் சகோதர, சகோதரிகளுடன் உடனிருப்பதும் அவர்களுடன் நாம் நேரம் செலவழிப்பதும் மிக மிகப் புனிதமானது என்கிறார் நம் திருத்தந்தை.

மருத்துவமனையிலும் இல்லங்களிலும் நோயுற்றோரைத் தேடிச் சென்று சந்திப்பது, முதியோர், ஆதரவற்றோர் இல்லங்களைச் சந்திப்பது, நோயுற்றோருக்காக செபமாலை ஒப்புக்கொடுத்து மன்றாடுவது போன்ற பல பணிகள் செய்யலாம்.

இதில் நாம் பெற்ற அனுபவத்தை நம் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்போம். நோயுற்றோரிடம் நாம் காட்டும் அக்கறைதான் "எனக்கே செய்தீர்கள்" என்ற இயேசுவின் பாராட்டை நமக்குப் பெற்றுத் தரும் என்பதை உணர்வோம்.



அருள்பணி. பென்சிகர் லூசன்

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 19)

## பிப்ரவரி - 2021

| | | |
|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : அருள்பணி ஸ்டார்லின் | 90920 55199 |
| பங்கு அலுவலகம் | : | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் மாலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 05.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - மாதத்தின் முதல் ஞாயிறு தவிர, இதர ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - சனி, ஞாயிறுகளில் (ஆகஸ்ட் மாதம் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர) (தவக்காலத்தில் புதுநன்மை வழங்கப்பட மாட்டாது)
- ✓ திருமணம் : பேராலய மரபுப்படி, சனிக்கிழமைகளிலும், முதல் ஞாயிறும் திருமணம் நடைபெறுவதில்லை. திருவருகைக் காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ பனிமய மாணவர் கூட்டம் : ஞாயிறு காலை 11.30 - 12.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 06.30 - 07.30
- ✓ பரிந்துரை மன்றாட்டு : திங்கள் மாலை 06.15 - 06.45
- ✓ விவிலியப் பாசறை : ஞாயிறு காலை 11.30 / மாலை 03.00; செவ்வாய் மாலை 06.15 - 08.15
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ உறுதிப்பூசுதல் அருள்சாதனம் : 30.05.2021
- ✓ புதுநன்மை அருள்சாதனம் : 01.08.2021
பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
மாலை 04.00 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

182. **திருக்குடும்ப சபைத் திருவிழா.** திருக்குடும்ப விழாவான **27.12.2020** ஞாயிறு அன்று திருக்குடும்ப சபையினர் தங்களின் முதல் ஆண்டுவிழாவைக் கொண்டாடினர். அவர்கள் சிறப்பித்த இரண்டாம் திருப்பலியில் 20 புதிய உறுப்பினர்கள் நாடா அணிவிக்கப்பட்டு சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஆசிரியை **மெடோனா** தலைமையில் 9 புதிய பொறுப்பாளர்கள் பணியேற்றுக்கொண்டனர்.

183. **நலிந்த குடும்பங்களுக்குப் புத்தாண்டுப் பரிசு.** கிறிஸ்துமஸ் மரத்தில் தொங்கவிடப் பட்டிருந்த உறைகளில் 26 உறைகளில் ரூ. 31, 300 காணிக்கையாகப் பெறப்பட்டது. பங்கின் தஸ்நேவிஸ்மாதா அன்பு நிதியிலிருந்து ரூ. 18,700 சேர்க்கப்பட்டு, மொத்தம் ரூ. 50, 000 பெறுமானமுள்ள உணவுப் பொருள்கள் 29.12.2020 செவ்வாய் மாலை "ஆசிர்வாதப் பாசறை"யைத் தொடர்ந்து, 82 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

184. **புத்தாண்டு வழிபாடுகள்.** 01.01.2021 வெள்ளி அதிகாலையிலும், காலை 06.30, 08.00 ஆகிய நேரங்களில் புத்தாண்டுத் திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டன. தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு ஸ்டீபன் ஆண்டகை தலைமையேற்ற காலை 08.00 மணித் திருப்பலி சூர்யா தொலைக்காட்சியிலும், ஸ்நோஸ் பசிலிக்கா இணைய தளத்திலும் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.

185. 02.01.2021 அன்று ஆண்டின் **முதல் சனி** சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய மாலைத் திருப்பலி, சப்பரப் பவனி, நவநாள் நற்கருணை ஆசீர் ஆகியன சூர்யா தொலைக்காட்சியிலும், ஸ்நோஸ் பசிலிக்கா இணையதளத்திலும் நேரலையாக ஒளிபரப்பப்பட்டன.

186. **பனிமயப் பாசறை:** மகிழ்ச்சிக்கான இறைமொழிப் பரிந்துரைகள்ணி என்னும் தலைப்பில் 03.01.2021 ஞாயிறு (17பேர்), 04.01.2021 திங்கள் (23பேர்), 05.01.2021 செவ்வாய் (33பேர்), 10.01.2021 ஞாயிறு (28பேர்), 17.01.2021 ஞாயிறு (13பேர்) ஆகிய 5 நாள்கள் நடைபெற்றது. மொத்தம்; 114 பேர் கலந்துகொண்டனர்.

187. இந்த ஆண்டு புனித சூசையப்பர் ஆண்டு என அறிவிக்கப்பட்டுள்ளதால், மாதத்தின் **முதல் புதன்** 06.01.2021 அன்று மாலைத் திருப்பலி முடிந்ததும், நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு, சூசையப்பர் வணக்க வழிபாடு நடைபெற்றது.

188. **முதல் வியாழன் திருமணி ஆராதனை:** 03.12.2020 வியாழன் மாலை 06.30 முதல் 07.30 வரையில் திருமணி ஆராதனை நடைபெற்றது. **"இயேசுவின் திருவருகை"** என்னும் தலைப்பில் மன்றாட்டுகள் எழுப்பப்பட்டன. தொடர்ந்து, ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்பட்டது.

189. பத்து மாதங்களுக்குப் பிறகு **திருச்சிலுவை சிற்றாலயத்தில்** வழிபாடுகள் மீண்டும் நடைபெறத் தொடங்கியுள்ளன. 05.01.2021 முதல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் பகல் 12.30 முதல் மாலை 04.00 வரை நலம் தரும் நற்செய்தி வழிபாடு நடைபெறுகிறது. 08.01.2021 முதல் ஒவ்வொரு வெள்ளியும் பகல் 12.00 மணிக்கு நன்றி வழிபாட்டுக்குப் பின் திருச்சிலுவை அன்பு உணவு வழங்கப்படுகிறது. மாலை 05.30 மணிக்கு மாலைத் திருப்பலி நடைபெறுகிறது. 06.02.2021 முதல் மாதாந்திர திருவிழிப்பு வழிபாடு நடைபெறும்.

190. ஜனவரி மாத **மூன்றாம் சனி சிறப்பு வழிபாடு (3)** 16.01.2021 சனி அன்று காலை 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. திருமண வரனுக்காகக் காத்திருப்போருக்காக நடைபெற்ற இந்தப் பரிந்துரை வழிபாட்டில் **51** இளைஞர், இளம்பெண்களுக்காக மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

191. பங்கு இளையோரின் முன்னெடுப்பில், அன்பியப் பொறுப்பாளர்களின் ஒத்துழைப்புடன் **“வினோத விளையாட்டு”** நிகழ்வு கொடிமர வளாகத்தில் ஜனவரி 22, 23, 24 (வெள்ளி, சனி, ஞாயிறு) மூன்று நாள்கள் நடைபெற்றது. திரளான மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

192. அன்பிய மாதத்தை முன்னிட்டு நமது பங்கின் 28 **அன்பியங்களுக்கிடையிலான கோலப் போட்டி** 23.01.2021 சனி மாலை 03.15 முதல் 04.30 வரை நடைபெற்றது. மொத்தம் 13 அன்பியங்கள் பங்கு பெற்றன. முதல் பரிசை காவல்தூதர் அன்பியமும் (ஜெயா, டால்ட்ரின், சாந்தி, ரஜுலா), 2ஆம் பரிசை அந்தோனியார் அன்பியமும் (லின்சி, சுஜிதா, நிமலா, சோஃபியா), 3ஆம் பரிசை பொம்பெயி மாதா அன்பியமும் (ஜெரிஷா, மிஸ்டிகா, விர்ஜின், ஷாலினி), 4ஆம் பரிசை சவேரியார் அன்பியமும் (ஜான்சி, மதி, ஆக்னஸ், மேரி க்ரீன்) வென்றனர். இதர ஒன்பது அன்பியங்களும் பங்கேற்புப் பரிசுகளைப் பெற்றனர்.

193. கோரமண்டல் சமூக நற்பணி மன்றம் வழங்கிய **கல்வி நிதி** நம் பங்கின் 10 மாணாக்கருக்கும், பெங்களுர் புனித மரியன்னை கல்வி அறக்கட்டளை வழங்கிய கல்வி நிதி நமது பங்கின் 20 மாணாக்கருக்கும் 24.01.2021 ஞாயிறு காலை நடைபெற்ற **“வெற்றியாளராக வாழுங்கள்”** என்னும் கல்வி ஊக்கப் பாசறையின் நிறைவில் வழங்கப்பட்டது. பல மாணவர்களின் பெற்றோரும் இந்தப் பாசறையில் கலந்துகொண்டனர்.

194. அன்பிய மாதத்தை முன்னிட்டு நமது பங்கின் அன்பிய **மண்டலங்களுக்கிடையே பாடல் போட்டி** 26.01.2021 (குடியரசு நாள்) செவ்வாய் அன்று நடைபெற்றது.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### I. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 57. | ஹட்ரியல் | அக்குவினாஸ் - ஜாப்ரி | 10-01-21 | செபஸ்தியார் |
| 58. | மேனுவேலா அஃப்ரீன் | யங்ஸ்டன் - சாரோன் | 10-01-21 | சவேரியார் |
| 59. | எலைஜா | இம்மானுவேல்; - சுஸ்மிதா | 10-01-21 | காவல் தூதர் |
| 60. | கிறிஸ் லியானா | ஜாக்சன் - ரோஸிமா | 10-01-21 | திருச்சிலுவை |
| 61. | யாஷ்வி | பிரதீப் - ரீனா | 24-01-21 | சிந்தாத்திரை மாதா |
| 62. | ஆஸ்டின் ரிக்கார்டோ | அஜய் - ரெஃப்லின் | 24-01-21 | இராயப்பர் |
| 63. | கேப்ரியலா ஜேனுகா | கிளாட்சன் - ஹார்ட்லின் | 24-01-21 | பொம்பெய் மாதா |





### வாழ்த்துகின்றோம்

## 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் |
|---|---|---|---|
| 52. | ஸ்னோவின் | ஜெயக்குமார் - ஜெயா | 30-01-2021 |
| 53. | ஹமில்டன் கெவின் | மார்ஷல் ஜூடு - டெர்சினா | 30-01-2021 |



### ஆசி கூறுகின்றோம்

## 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | திருமணநாள் |
|---|---|---|
| 50. | ஜூலியஸ் - பாஸ்டினா | 18-01-2021 |
| 51. | மெர்வின் - சிபோரா | 20-01-2021 |
| 52. | ரைசன் ஜோ - சிலானி | 27-01-2021 |



### செபிக்கின்றோம்

## 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | கணவர் / மனைவி | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 71.. | கிளிண்டன் | சொகிலா | 01-01-2021 | காவல் தூதர் |
| 72. | ரோணிமுஸ் | ரெக்ஸி | 08-01-2021 | அன்னை வேளாங்கன்னி |
| 73. | மரியதாஸ் | டார்வினா | 13-01-2021 | லூர்து மாதா |
| 74. | ரெக்ஸ்லின் | திருத்துவம் | 13-01-2021 | பாத்திமாமாதா |
| 75. | சூசையா வாஸ் | லவ்லி முறாய்ஸ் | 19-01-2021 | அன்னை தெரசா |
| 76. | ஸ்டெல்லா டிக்குருஸ் | பன்சாலி | 24-01-2021 | திருச்சிலுவை |

## பங்கில் நிகழவிருப்பவை

- **02.02.2021 செவ்வாய்** மாலை 05.00 மணிக்குப் **புனித சூசையப்பர் ஆண்டு** தொடக்க விழா தூத்துக்குடி மறைவட்ட அளவில் நமது பேராலயத்தில் நமது ஆயர் மேதகு ஸ்டீபன் அவர்களால் நிறைவேற்றப்படும். இத்திருப்பலி சூர்யா தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

- ❖ **06.02.2021 முதல் சனியன்று மாலைத் திருப்பலி**யும், சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் சூர்யா தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ❖ 07.02.2021 ஞாயிறு (காலை 11.30), 15.02.2021 திங்கள் (மாலை 06.15), 14.02.2021 ஞாயிறு (மாலை 03.00) ஆகிய மூன்று நாள்களும் பிப்ரவரி மாதத்துக்கான **பனிமயப் பாசறை "மரியன்னைத் திருத்தலங்கள்"** என்னும் தலைப்பில் நடைபெறும்.
- ❖ 04.02.2021 வியாழன் மாதத்தின் **முதல் வியாழன்** அன்று லூர்து மாதா கெபியில் மாலைத் திருப்பலி முடிந்ததும், திருமணி ஆராதனை "லூர்து அன்னையின் ஆசிகள்" என்னும் தலைப்பில் நடைபெறும்.
- ❖ 20.02.2021 சனி காலை 11.30 முதல் 03.00 வரை **மூன்றாம் சனி பரிந்துரை வழிபாடு** "குடும்ப ஆசிர்வாதங்களுக்காக" ஒப்புக்கொடுக்கப்படும். தங்கள் குடும்பங்களுக்காக செபிக்க விரும்புகிறவர்கள் தங்களின் பெயரை பங்குத் தந்தையிடம் நேரிலோ, அல்லது வாட்ஸ்அப் (94875 47823) வழியாகவும் தெரிவிக்கலாம்.
- ❖ 01-02-2021 முதல் 11-02-2021 வரை புனித **லூர்து அன்னை கெபி**யில் அருளிக்க ஆசீரும், திருப்பலியும் நடைபெறும். 10-02-2021 புதன் அன்று மாலை 6.30 மணிக்கு மாலை ஆராதனையும், 11-02-2021 வியாழன்; அன்று காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், மாலை 6.30 மணிக்கு புனித லூர்து அன்னையின் சப்பர பவனியும் நடைபெறும்.
- ❖ 17-02-2021 **சாம்பல் புதன்.** அன்று காலை 5.30, 6.30 மற்றும் மாலை 5.30 மணிக்குத் திருப்பலி கள் நடைபெறும். அன்றைய நாள் உபவாசம் மற்றும் சுத்தப் போசனம் (உண்ணாநோன்பு, புலால் நோன்பு, ஊடக நோன்பு) கடைப்பிடிக்க வேண்டிய நாளாகும்.

## 3. திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நலம் தரும் நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலியும் நடைபெறும்.

| எண். | நாள் | தலைப்பு | செய்தியாளர் |
|---|---|---|---|
| 45 | 02.02.2021 | ஆன்ம நலம் | அருள்பணி. ரெயோசில் பெப்பி |
| 46 | 09.02.2021 | மனமாற்றம் | அருள்பணி. ஜோசப் |
| 47 | 16.02.2021 | தலையான பாவம் 1: ஆணவம் | அருள்பணி. ஜெரால்ட் ரவி |
| 48 | 23.02.2021 | தலையான பாவம் 2: பேராசை | அருள்பணி. மைக்கேல் கிராசிஸ் |
| 49 | 02.03.2021 | தலையான பாவம் 3: பொறாமை | அருள்பணி. ரெயோசில் பெப்பி |



# தவக்கால சிறப்பு நிகழ்வுகள் 2021

## வழக்கமான நிகழ்வுகள்

1. ஒவ்வொரு நாளும் திருப்பலி முடிவில் சிலுவைப் பாதை நடைபெறும்.
2. ஒவ்வொரு வெள்ளியும் அதிகாலை 04.30 மணிக்கு பேராலய வளாகத்தில் சிறப்பு சிலுவைப் பாதை நடைபெறும்.
3. ஒவ்வொரு வெள்ளியும் இரண்டாவது திருப்பலி முடிவில் அன்பியங்கள் வழிநடத்தும் சிலுவைப் பாதை நடைபெறும்.

## சிறப்பு நிகழ்வுகள்

**1. செவ்வாய்தோறும் திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்**

தவக்கால நற்செய்தியும், திருப்பலியும்- தலைப்பு: ஏழு தலையானபாவங்கள் (விபரங்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன)

**2. வியாழன்தோறும் மாலைத் திருப்பலியைத் தொடர்ந்து குறுந்தியானங்கள்**

- 18.02.2021 – பாவங்கள் நூறு!
- 25.02.2021 – சிலை வழிபாடும், இன்றைய புதிய சிலைகளும்
- 04.03.2021 – சொல்லத் தவறிய பாவங்கள்

**3. ஞாயிறு சிறப்பு நிகழ்வுகள்**

- 21.02.2021 அந்தோனியார் அரங்கில் காலை 11.30 மணிக்கு விவிலியப் பாசறை “யோபுவின் பார்வையில் ஓர் ஆன்ம சோதனை”.
- 28.02.2021 அந்தோனியார் அரங்கில் மாலை 03.00 மணிக்கு விவிலியப் பாசறை “இறுதிக் காலப் பாவங்கள்”.
- 07.03.2021 மாலை 06.00 திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் தவக்கால நற்செய்திக் கூட்டம்.
- 14.03.2021 காலை 09.30 முதல் மாலை 04.00 வரை மங்கலகிரி டிவைன் மெர்சி தியான இல்லத்தில் ஒருநாள் தியானம்.
- 21.03.2021 அந்தோனியார் அரங்கில் காலை 11.30 மணிக்கு விவிலியப் பாசறை “நவீன பாவங்கள், சமூகப் பாவங்கள், பாவப் பங்கேற்பு”. மாலையில் ஆயர் தலைமையில் தவப் பவனி நமது பேராலயத்தில் தொடங்கி, திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் நிறைவுபெறும்.
- 28.03.2021 குருத்து ஞாயிறு. காலை 11.00 முதல் பிற்பகல் 03.00 வரை திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் நோன்புடன் கூடிய குறுந்தியானம்.

மாதம் ஒரு படம் : 17

# அமல உற்பவத் தாய்



ஓவியர் ஜெயராஜ்

# 22ND YEAR ANNIVERSARY

## *In Loving Memory of Our Dad*



**Bloomed**
**10.10.1928**

**Withered**
**21.02.1999**

# C. PANIMAYAM FERNANDO

## AGE : 70

*TWENTY TWO YEARS ARE OVER, SINCE YOU PASSED AWAY*
*THE WAY WE MISS YOU IS DIFFERENT NOW*
*WE HOPE YOU KNOW HOW MUCH YOU MEANT TO US.*
*WE STILL THINK ABOUT YOU EVERYDAY*
*WE JUST LOVE AND MISSED YOU DAD*
*IN OUR OWN SPECIAL WAY.*

**There will be a mass for the soul of our beloved father.**
**5.30 p.m. 20th Feb 2021 @ OLS Church.**

*Fondly remembered and Forever missed by*

**Children**

**Mrs.P. Sahayarani and Family**
**Sr. P. Terencia Mary,** Bon Secour Convent
**Mr. P. Anto and Family**
**Mr. P. Xavier and Family**
**Mrs. P. Jesilda and Family**

73, South Emperor **Street,**
Tuticorin.

# விண்ணக வாழ்வின்
# முதலாண்டு நினைவஞ்சலி

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாய்த் திகழ்வாய்.
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்" (எசா 62:3)




# E. பின்சி (எ) சுந்தரி பர்னாந்து

**(W/o. Late. J.S. எக்ஸ்பெடிட் பர்னாந்து, மணப்பாடு)**

**ஓய்வு ஆசிரியர் (புனித லசால் மேல்நிலைப் பள்ளி)**

பிரிவின் நினைவில் துயருறும்

**மகன், மகள்கள், மருமக்கள், பேரன்கள், பேத்திகள்**
**மற்றும் குடும்பத்தினர்**

SHINY Ph : 94421 21493